**ஜூலை - 6**

**"கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ; அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்." - சங் 25 : 12**

நம்மை நெருக்கும் சோதனைகளையும் கஷ்டங்களையும் கண்காணிப்பது நமக்கடுத்ததல்ல. நமக்கடுத்தது என்னவென்றால், கர்த்தருக்கு நம்மையே கபடமற்ற பிரதிஷ்டை செய்து பிறகு நம்முடைய சோதனைகளும் தொடரும் பாவங்களும் எவ்வளவு பெரிதாக இருக்கும் என்றும், அவருடைய நடத்துதல்களில் பின் தொடரும்போது நம்முடைய தியாகங்கள் எவ்வளவு முக்கியமானவையாக இருக்கும் என்பது குறித்துமுள்ள நிர்ணயத்தை அவரிடம் விட்டுவிடுவதாகும். சிலருக்கு மற்றவர்களைவிட அதிகமான விசேஷ சோதனைகள் தேவையாயிருக்கும் என்று கர்த்தர் காண்பார். மேலும் அந்தக் காரியங்கள் சிலருக்கு பெரிய சோதனைகளாகவும் பெரிய தியாகங்களைக் குறிக்கிறதாகவும் இருக்கும். மற்றவர்களுக்கு, கர்த்தருக்கும் அவருடைய விவகாரங்களுக்கும் மிகவும் அதிகமான அன்பும், ஊழியத்துக்கு அதிக ஆர்வமும் இருக்கிற காரணத்தால், அப்போஸ்தலன் தன்னுடையதைக் குறித்துச் சொல்லுகிறதுபோல, "இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது." **- Z '99, 13 (R 2416)**

கர்த்தருக்குப் பயன்படுவதென்பதற்கு அவரிடத்தில் பயபக்தியாயிருப்பது என்று அர்த்தம். தேவனிடத்தில் பயபக்தியாயிருக்கிற மனுஷன் கடமை அன்பிலிருந்தும் தன்னலமற்ற அன்பிலிருந்தும் அவருக்குக் கீழ்படிகிறான். தீமையின் வழிகளைத் தவிர்க்கவும் தள்ளவும், சரியான பாதைகளை நேசிக்கவும் தெரிந்து கொள்ளவும் அவனுடைய இருதயத்துக்கும் மனதுக்கும் வழியைக்காட்டி, அப்படிப்பட்டவனுக்கு ஜீவனின் பாதை இன்னதென்று கற்பிப்பதை தேவன் மேற்கொள்ளுகிறார். தேவனுக்கிருக்கும் நமது பயபக்தி உண்மையானதாக இருக்குமானால், அவர் நமது வழியைப் பிரகாசிப்பார் என்று முழுமனதான விசுவாசத்தோடு நம்பலாம். நமது விசுவாசம் நிறைவேற்றப்படும். **- P '33, 80.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**உபா 4:10; 10:12,20,21; யோசு 24:14; 1சாமு 2:30; 12:24; 2நாளா 19:7; சங் 2:11; 4:4; 25:13,14; 33:8,18; 34:7,9,11; 89:7; 103:13; 145:19; நீதி 1:7; ஏசா 8:13; மத் 10:28; அப் 13:16,26; 2கொரி 7:1; எபி 12:28; வெளி 11:18.**

**கோபுர வாசிப்பு : Z '97, 256 (R 2208).**

**வினாக்கள் : இந்த வாரம் இந்த வசனம் சம்பந்தமாக அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு பயன்பட்டது? அவற்றின் பலாபலன் என்ன?**